செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

திரு. ஸ்டேன் சுவாமி என்று அழைக்கப்படும் திரு. ஸ்டான்லிஸ்லாஸ் லூர்துசாமி அவர்கள் சமூகத் தொண்டாற்றுவதில் மிகுந்த அக்கறை கொண்டவர். ஆதிவாசிகள் மற்றும் பழங்குடியின மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் அவர்களது மேம்பாட்டிற்காக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அன்னாரது மறைவால், அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(ஈ) அய்யா இளங்குமரனார், தமிழறிஞர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழையே உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த முதுபெரும் அறிஞரான அய்யா இளங்குமரனார் அவர்கள், 26-7-2021 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

இலக்கணச் செழுமையும், இலக்கிய வளமும் கொண்ட தமிழ் மொழியை, பண்பாட்டை தமிழர்களின் இல்லங்கள்தோறும் நிலைநிறுத்திட தொடர்ந்து பணியாற்றியவர். பழந்தமிழர் வாழ்வியல் அடிப்படையில், உடல் நலன் காக்கும் முறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்து, அவற்றை இன்றைய இளைஞர்களும் பின்பற்றும் வழிமுறைகளைக் கற்றுத் தந்தவர். அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சான்றோர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

(உ) மதுரை ஆதீன பீடாதிபதி திரு. அருணகிரிநாதர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை ஆதீனம் திரு. அருணகிரிநாதர் அவர்கள் 13-8-2021 அன்று உடல் நலக் குறைவால் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

தமிழகத்தின் தொன்மையான சைவத் திருமடங்களில் ஒன்றான மதுரை ஆதீனத்தின் 292-வது பீடாதிபதியான